செ.வெ.எண்.03 நாள்.02.04.2019

தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொது தேர்தல் பொது பார்வையாளர்கள் திருமதி.சீமா சர்மா ஜெயன், இ.ஆ.ப., அவர்கள், திரு.துக்கி சயாம் பேயிக், இ.ஆ.ப., ,அவர்கள் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. டாக்டர்.கே.மாதவிலதா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றுவது குறித்து மண்டல அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---------

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொது தேர்தல் பொது பார்வையாளர்கள் திருமதி.சீமா சர்மா ஜெயன், இ.ஆ.ப., அவர்கள், திரு.துக்கி சயாம் பேயிக், இ.ஆ.ப., ,அவர்கள் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. டாக்டர்.கே.மாதவிலதா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றுவது குறித்து மண்டல அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.04.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-
இந்திய தேர்தல் ஆணையம் கடந்த மாதம் தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என அறிவித்தது. அறிவித்த நாளிலிருந்து உடனடியான நன்னடத்தை விதிமுறைகள் அமலில் வந்தது. மேலும் இந்திய தேர்தல் ஆணையம் நடைபெறவுள்ள தேர்தலில் வாக்குப்பதிவு இயந்திரத்துடன் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் பயன்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்து வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கும் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்ட பயிற்சி வருகிற ஏப்ரல் 7 ம் தேதி நடைபெற இருக்கிறது. இப்பயிற்சியில் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம் அளிக்கப்படுகிறது. மேலும் இந்நாளில் நடைபெறும் பயிற்சியில் கலந்துகொள்ளும் அலுவலர்கள் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் கையாள்வது எவ்வாறு, மாதிரி வாக்கு பதிவு செய்வது எவ்வாறு மற்றும் வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குப்பதிவு இயந்திரத்திற்கு எவ்வாறு சீல் வைப்பது உள்ளிட்ட அனைத்து பணிகளும் நீங்கள் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும். அனைவரும் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருவதால் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட தேர்தல் அலுவலர் என பேசினார்.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொது தேர்தல் பொது பார்வையாளர் திருமதி.சீமா சர்மா ஜெயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் தேர்தல் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு அலுவலர்களுக்கும் தேர்தல் தொடர்பான பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக நடைபெறவுள்ள தேர்தலில் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு கட்டங்களாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு நாளான்று பணியாற்றும் வாக்குசாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குபதிவு அலுவலர்களுக்கு தேர்தல்

விதிமுறைகள் குறித்து கையேடுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. விதிமுறைகளை பார்த்து தெரிந்து கொண்டு இவைகளை முழுமையாக பயன்படுத்தி வாக்குபதிவு நாளில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி பொது தேர்தல் பொது பார்வையாளர் திரு.துக்கி சயாம் பேயிக், இ.ஆ.ப., ,அவர்கள் தெரிவித்ததாவது:-
தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற பொது தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் ஒன்றாக நடைபெறவுள்ளதால் தேர்தல் ஆணையத்தின் மூலம் தெரிவித்துள்ள அனைத்து விதிமுறைகளையும் தவறாமல் பின்பற்ற வேண்டும். வாக்குச்சாவடி மையத்தில் தாங்கள் மேற்கொள்ளும் பணிகளை நுன் பார்வையாளர்கள் கண்காணிப்பார்கள். எனவே தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. டாக்டர்.கே.மாதவிலதா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-
மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு நேரில் சென்று தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். வாக்குச்சாவடி மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடிநீர், கழிப்பறை, மாற்றுத்திறனாளிகள் வந்து செல்ல சாய்வு தளம் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும், வாக்குசாவடி மையங்களுக்கு செல்லும் சாலை சீராக உள்ளதா என்பதையும் மாற்று பாதை உள்ளதா என்பதையும் ஆய்வு செய்து தெரிந்து வைத்திருக்க வேண்டும். கடந்த தேர்தலில் வாக்குப்பதிவுகள் குறைவாக பதிவாகியுள்ள பகுதிகளில் வாக்குச்சாவடி பகுதி விழிப்புணர்வு குழுக்கள் மூலம் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களின் வரைவு படம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட பயிற்சியின் போது அலுவலர்கள் அனைத்து விவரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திரு.வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு.வீரப்பன், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்மரான் ஜீத் சிங் கலோன்,இ.ஆ.ப, உதவி ஆட்சியர் பயிற்சி மரு.அனு,இ,ஆ.ப,. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.நம்பிராஜன் மற்றும் மண்டல அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.